**பருத்தித்துறை நகர சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 28 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 13 யூலை 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் பருத்தித்துறை நகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**கணக்கீட்டு கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | 2020ம் ஆண்டு மேற்படி கொள்கை வெளிப்படுத்தப்பட்டு தயாரிக்கப்படும். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நகரசபை ஒழுங்கு விதி | | | |
| | (i) அத்தியாயம்(III) பிரிவு 54 (2) | மன்றக்காணி வாடகை மற்றும் அறவீடுகள் சம்பந்தமாக அவ்வவ் காலப்பகுதியில் அறவீடு மேற் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உரிய ஒழுங்கு விதிக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது |
| | (ii) அத்தியாயம் (III) பிரிவு 54 (3) | ரூபா 13,443,582 பெறுமதியான ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு செயலாளரினால் பற்றாணைச் சீட்டு வழங்கப்பட்டிருக்க வில்லை. | உரிய ஒழுங்கு விதிக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும் | வரியிறுப்பாளர் ஒவ்வொருவருக்கும் பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் 29 திசெம்பர் 2016 இன் 30 2016 ஆம் இலக்கம் | சபையின் 01 வாகனத்திற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உரிய சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 61,748,113 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 42,380,315 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் ❖ | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் ❖ | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 6,025,000 | - | 6,714,819 | 13,443,582 | 1,085,000 | - | 3,086,719 | 7,344,186 |
| வாடகைகள் | 10.600.000 | - | 9,897,279 | 1,222,492 | 17,000,000 | - | 8,751,103 | 1,281,268 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 572.000 | - | 691,215 | - | 1,450,000 | - | 939,750 | - |
| ஏனைய வருமானம் | 76.088.000 | - | 39,259,210 | 24,795,755 | 68,781,500 | - | 10,230,513 | 42,322,867 |
| | **93.285.000** | **-** | **56,562,523** | **39,461,829** | **88,316,500** | **-** | **23,008,085** | **50,948,321** |

❖ பட்டியலிடப்பட்ட வருமானம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 23,008,085 ஆக இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 56,562,523 ஆக அதிகரித்துள்ளமையால் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 33,554,523 இனால் அதிகரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டிருந்தது. எனினும் பட்டியல்படுத்தப்பட்ட வருமானம் | பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்த வேண்டும். | பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினைப் பற்றி பதில் தரப்படவில்லை. |

தரப்படாமையினால் திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்றில் உள்ள நிலுவைகளினை உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

### 2.2.3 வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் ரூபா 13,443,582 பெறுமதியான ஆதனவரி நிலுவை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனவரி நிலுவை உரிய காலத்தில் அறவிடப்பட வேண்டும். | ஆதனவரி நிலுவையினை அறவிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது |

### 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கடை வாடகை நிலுவை ரூபா 1,222,492 சபையினால் அறவிடப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையினால் கடை வாடகை நிலுவைகள் முழுமையாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கடை வாடகை அறவிடப்பட்டுள்ளது |

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையின் எல்லைக்குள் ரூபா 35,802 பெறுமதியான விளம்பர பலகைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தும், உரிமங்களிற்கான அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | விளம்பரக்கட்டணம் உரிய காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. |

**2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

**(அ) நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,080,581 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் நிலுவைகள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. |

**(ஆ) முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,872,715 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019ம் ஆண்டில் நிலுவைகள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபை கட்டளைச் சட்டம் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 15 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 15 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படவேண்டும். | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு காலத்திற்கு காலம் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் நகர சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுகாதாரத் தொழிலாளர்களுக்கு வருடாந்தம் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ii) | நகர சபையினால் திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் 26 சுகாதாரத் தொழிலாளர்களுக்கும் வருடாந்தம் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை. | சுகாதாரத் தொழிலாளர்களுக்கு வருடாந்தம் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும் |
| (iii) | சபையானது திண்மக்கழிவு சேகரித்தலின் போது தரம் பிரிக்கப்படாது ஒன்றாகவே சேகரிக்கப்படுகின்றன. | திண்மக்கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு சேகரிக்கப்பட வேண்டும். | திண்மக்கழிவுகள் தரம்பிரிக்கும் திட்டம் தற்போது ஆரம்பிக்கபப்ட்டுள்ளது |

(இ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | பொதுச் சுகாதார பரிசோதகரின் ஆலோசனையுடன் காவிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உள்ளுராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்பிக்கப்படாமையினால் நகர சபைக்குரிய முக்கிய பணிகள் நிறைவேற்றப்படாமல் இருந்தது. | உள்ளுராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்பிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஆ) | நகர சபையானது பொதுமக்கள் சேவை பட்டயத்தினை காட்சிப்படுத்தியுள்ள போதும் அதில் குறிப்பிடப்பட்டதற்கு முரணாக மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் காலம் தாழ்த்தியே வழங்கப்பட்டிருந்தது. | சபையினால் பொதுமக்களிற்கு வழங்கப்பட வேண்டிய சேவைகள் உரிய காலத்தில் வழங்கப்பட வேண்டும். | பொதுமக்கள் சேவை பட்டயம் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (இ) | சபையினால் ரூபா 174,964,734 பெறுமதியான நிதியினை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்தி நோக்கத்திற்கு பயன்படுத்தாது நிலையான வைப்பாக பேணப்பட்டு வருகின்றது. | நிலையான வைப்புக்கள் பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட வேண்டும். | நிலையான வைப்பின் வட்டி வருமானங்கள் சபையின் அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்தி வருகின்றன. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 21 மனித வளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளன. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் , கட்டடங்கள் என்பவற்றின் சோலைவரி அறவிடுவதற்காக வருடாந்தம் சபையினால் ஆதன உரிமையாளர்களுக்கு K படிவம் வழங்கப்பட வேண்டியபோதிலும் 2018 ஆம் ஆண்டில் 2,535 ஆதனங்களுக்கு K படிவம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | சோலைவரி அறவிடுவதற்காக வருடாந்தம் K படிவம் வழங்கப்பட வேண்டும். | வீட்டு உரிமையாளர்கள் வெளிநாடுகளில் இருப்பதனால் உரியவர்களிடம் நேரடியாகக் கையளிக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தண்ணீர் பௌசர் இலக்கம் NPRY – 5587 இனையும் இரண்டு சில்லு உழவு இயந்திரம் NPGG - 2635 இனை பயன்படுத்த முடியாது காணப்படுகின்ற போது அதனை திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இயந்திரங்களிற்கு உரியவாறு உரிய காலப்பகுதியில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

### 3.5.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையானது 10 எண்ணிக்கையான காணிகளுக்கு உரிமை மாற்றப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான காணிகள் அனைத்தும் உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டும். | இக்காணிகளின் ஆவணங்களை பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 3.5.3 விளைவற்ற சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | தண்ணீர் தாங்கி வாகனம் ஒன்று முழுமையாகத் துருப்பிடித்து பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றபோதும் இதனை திருத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் தொடர்பாக உரிய காலப்பகுதியில் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். | வாகனத்தினை 2019 இல் ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது |
| (ஆ) | நகர சபைக்கு சொந்தமான கடைத்தொகுதியில் 03 கடைகள் வாடகைக்கு விடப்பட்டிருக்கவில்லை. | சபைக்குரிய சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்த வேண்டும். | கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு எவரும் முன்வராத காரணத்தினால் இதனை மாற்றுத் திட்ட அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் பாதீட்டு மீண்டுவரும் செலவினங்களையும் உண்மையான மீண்டுவரும் செலவினங்களையும் ஒப்பிடும் போது ரூபா 11,696,308 ஆக சாதகமாக காணப்படுகிறது. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |